**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்குமாகாணம்**
**சித்திரக்கலை – 2019**

**தரம் 11** **மூன்றாம் தவணை** **நேரம்: 2 மணித்தியாலம்**

**பகுதி – III**

**கவனிக்க:**

- ○ வரைதாளின் பின்பக்கத்தில் இடதுபக்க மேல்மூலையில் உங்கள் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- ○ நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பஸ்ரல் வர்ணம், உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு ஊடகத்தினையும் பயன்படுத்த முடியும்.
- ○ பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதல் தாள் உலர்ந்திருக்க வேண்டும்.

**"அ" பகுதி அல்லது "ஆ" பகுதி அல்லது "இ" பகுதியில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுக..**

**பகுதி "அ"- கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம்**

1. சமயச் நிகழ்வொன்றில் கலந்துகொள்ளும் பக்தர்கள்.
2. திறந்த வெளிச் சந்தை
3. விளையாட்டுப் போட்டி ஒன்றின் உணர்வு பூர்வமான சந்தர்ப்பம்.
4. நீர் அருந்தும் யானைக் கூட்டம்.

**பகுதி "ஆ"- அலங்காரச்சித்திரம்**

5. ஆக்கபூர்வமான உருக்களைக் கொண்டு கதவுச் சேலைக்கான அலங்காரம் ஒன்றினை வரைவோம்.

6. கேத்திர கணித வடிவங்களைக் பயன்படுத்தி 9 x 9 அளவுடைய சீத்தைத்துணி ஒன்றிற்கான அலங்காரம் ஒன்றினை வரைவோம்.

7. மேசை மின்விளக்கு மறைப்பு (Lamp Shade) ஒன்றினை வரைவோம்.

8. பாரம்பரிய அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி பித்தளைத் தாம்பாளம் ஒன்றினை வடிவமைப்போம்.

**பகுதி "இ"- கிரபிக்சித்திரம்**

9. பாடசாலையின் நுண்கலை மன்றத்திற்கான இலட்சனை ஒன்றினை வடிவமைக்குக.
10. அதிகரித்து வரும் வெப்பத்தின் தாக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சுவரொட்டி ஒன்றினை வடிவமைக்குக.
11. குளிர்பானப் போத்தல் ஒன்றிற்கான விளம்பரம் செய்யும் வகையில் மேலுறை ஒன்றை அமைக்குக.

(30 புள்ளிகள்)

kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page